NO FAME
NO SELF INTEREST
ONLY GOD
NO NAME

ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



ஹரே ராம... மஹாமந்திர நகர்வல நாமகீர்த்தனம்
இடம்: திருநெல்வேலி
தேதி : 24.02.2007

"ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே"


| | | |
|---|---|---|
| வேணு : 12 | ஏப்ரல் – 2007 | கானம் : 9 |

www.madhuramurali.org





ஹரே ராம... மஹாமந்திர நகர்வல நாமகீர்த்தனம்
இடம்: கோவில்பட்டி தேதி : 18.02.2007

"ஹரே ராம.... நாமகீர்த்தன" கூட்டுப் பிரார்த்தனை
இடம்: ஆர்த்தி ஹால், கோவில்பட்டி
தேதி : 18.02.2007, 19.02.2007





"ஹரே ராம.... நாம சங்கீர்த்தன" கூட்டுப் பிரார்த்தனை
இடம்: நெல்லை சங்கீத சபா
தேதி : 24.02.2007, 25.02.2007






Lecture In English By Sri Pradeep Janakiraman
in the Divine Presence of
H.H.Sri Sri Muralidhara SwamiJi
Place : Vani mahal, T.Nagar, Chennai-17
Date: 03.03.2007 & 04.03.2007



இமயம் சேவாலயத்தில்
பஞ்சமுக விநாயகர் பிரதிஷ்டை விழாவில்
இடம்: தூத்துக்குடி, தேதி : 22.02.2007





பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் 172 வது ஜெயந்தி தின விழா, இடம்: ஆம்பூர், தேதி : 18.03.2007



ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரை
இடம்: ஸ்ரீ நவநீதகிருஷ்ணன் திருக்கோவில், தஞ்சாவூர்
தேதி : 08.03.2007 முதல் 13-03-2007 வரை



ஹரே ராம... மஹாமந்திர நகர்வல நாமகீர்த்தனம்
இடம்: ஸ்ரீநிவாசபுரம்,தஞ்சாவூர்
தேதி : 13.03.2007

# மதுரமுரளி

Rs.10/-

Registered as Newspaper in India R. No. 62828 / 95

Date of Publication: 5th and 6th of Everymonth

| Regd. No. TN / CC (S) DN / 119 / 06-08 | Licensed to Post without prepayment WPP NO.TN / CC (S) DN / 51 / 06-08 |
|---|---|

| வேணு : 12 | ஏப்ரல்– 2007 | கானம் :9 |
|---|---|---|






"ஹரே ராம.... நாமகீர்த்தன" கூட்டுப் பிரார்த்தனை

இடம்: கர்பரக்ஷகி மஹால், திருச்சி

தேதி : 10.03.2007.


Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083 and Printed by Mrs. Sri. Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar. Website : www.madhuramurali.org;

e-mail : contact@madhuramurali.org ; publications@madhuramurali.org

ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு : 12 ஏப்ரல் 2007 கானம் : 9

## பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம் | ... | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 135 | ... | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள் | ... | 5 |
| 4. | மாதம் ஒரு புத்தகம் | ... | 6 |
| 5. | யூத மதமும் யூதர்களும்- ஒரு சிறிய அறிமுகம் (சென்ற இதழ் தொடர்ச்சி) | ... | 8 |
| 6. | குருவாயூரப்பனும், பாகவத ஸப்தாஹமும் | ... | 10 |
| 7. | பாலகர்களுக்கு ஒரு கதை - 108 | ... | 12 |
| 8. | மாலே மணிவண்ணா - 51 | ... | 16 |
| 9. | பிருந்தாவனமும் நந்தகுமாரனும் | ... | 19 |
| 10. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 133 | ... | 21 |
| 11. | செய்திகள் | ... | 24 |
| 12. | நாமஸங்கீர்த்தன ஸத்சங்கச் செய்திகள் | ... | 27 |


### தமிழ்ப் புத்தாண்டுச் செய்தி

**'ஸர்வஜித்' - எல்லா காரியங்களிலும் வெற்றியையே தரும் தமிழ்ப் புது வருடத்தில், நம் மதுரமுரளி வாசகர்கள் எல்லோர் குடும்பத்திலும் எப்பொழுதும் எல்லா நலங்களும் பொங்க குருவருளையும், திருவருளையும் இறைஞ்சுகின்றோம்.** - ஆசிரியர்.

ஸ்ரீ ஹரி :

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம்

ராகம்: மத்யமாவதி தாளம்: ஆதி

*குருவாயூரென்னொரு க்ஷேத்ரமுண்டெ*
*க்ஷேத்ரந்திங்கள் ஒரு உன்னியுண்டெ*
*உன்னிக்கு க்ருஷ்ணன் என்ன பேருமுண்டெ*
*உன்னிய ஸ்ரீவேலியில் திவஸங்கண்டெ*
*மோஹிச்சு போய் பக்தன் மார்களொக்கே!*

*கொட்டாரம்தன்னில் வளர ஐச்வர்யம் - அவ்விடெ*
*குட்டியானகளோடொப்பம் உன்னியாடும்*
*தாமரப் பூவினெ கையில் கொண்டு*
*கள்ளச் சிரியுடன் சோபிக்கும்*
*அப்பமும் வெண்ணையும் தராமோ*
*அப்பமும் வெண்ணையும் வேகந்தந்நால்*
*வேண்டியதொக்கே உன்னி அனுக்ரஹிக்கும்!!*

(குருவாயூர்)


***Sri Hari :***

***Pranams to the Lotus feet of***
**H.H. SRI SRI MURALIDHARA SWAMIJI**

M/s. BUDDIES INFOTECH PRIVATE LIMITED
*Web Designing and Application Development*

Old No. 22, New No. 34, Sriman Srinivasa Road,
Alwarpet, Chennai - 600 018. Phone No. 044-421 44 662
e-mail : contact@buddiesinfotech.com

பெங்களூரில் உள்ள ராமமூர்த்தி நகர் லே அவுட்டில், சில பக்தர்கள், அந்த இடத்தில் உள்ள ஒரு இடத்தை ஒரு வ்ருத்தாஸ்ரமம் (முதியோர் இல்லம்) அமைப்பதற்கு தாமாக முன்வந்து கொடுத்தார்கள். முதலில், அங்கு பாண்டுரங்கனுக்கு ஆலயம் எழுப்புவதாக தீர்மானிக்கப்பட்டிருந்தது. வெகுநாளாக, நம் ஸ்வாமிஜி அவர்கள், ''எவ்வளவோ வேத பாடசாலைகள் நடக்கின்றன. வேதம் எவ்வளவு முக்கியமோ அந்த அளவிற்கு இதிகாச புராணங்களும் முக்கியம். ஆனால், அவைகளைச் சொல்லிக் கொடுப்பதற்கு ஒரு இதிகாச புராண பாடசாலைகூட இல்லையே'' என்று வருத்தப்பட்டார்கள். ''வருங்காலத்தில், ஆயிரக்கணக்கான நபர்கள் நம்முடைய நாட்டின் புராணங்களை உலகத்தில் உள்ள எல்லா நாட்டிற்கும் எடுத்துச் சென்று பக்தி பிரச்சாரம் செய்ய வேண்டும்'' என்ற நோக்கத்திலேயே ஒரு இதிகாச புராண பாடசாலை ஆரம்பித்து நடத்தவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

வேத வியாஸ புராண பாடசாலை என்று பெயர் வைத்து அதை நடத்தும் பொறுப்பை பெங்களூர் திரு. சங்கரநாராயணன் அவர்களிடம் ஒப்படைத்தார்கள். அவர் தலைமையில் ஒரு டிரஸ்ட் நிறுவப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. முதலில், பாடசாலை அமையும் வளாகத்தில், காம்பவுண்ட் சுவரும், போர்வெல்லும் போடப்பட்டது. ஒருநாள், ஸ்ரீ ஸ்வாமிஜி பஞ்சவடியிலிருந்து (மஹாராஷ்ட்ரா) திரும்பி வரும்பொழுது அங்கு வந்து சிறிது நேரம் தியானத்தில் அமர்ந்தார்கள். ''இந்த இடத்தில் ஸ்ரீ ஹனுமாருடைய சாந்நித்யம் அதிகமாக உள்ளது. ஆகவே, இங்கு ஒரு ஹனுமாருக்கே கோயில் வரவேண்டும்'' என்று கூறினார்கள். அப்பொழுது, வானம் நிர்மலமாக இருந்தது.

திடீரென்று, எந்த இடத்தில் ஸ்வாமிஜி, ஹனுமாருடைய கோயில் மூல கருவறை வரவேண்டும் என்று சொன்னாரோ அதன் மேலே திடீர் என்று ஒரு மேகம் இதுவரை காணப்படாதது போல ஒரு மலையை தூக்கி பறந்து வரும் ஹனுமார் ரூபத்தில் தோன்றியது. சிறிது நேரம் அப்படியே நின்றது. முகம், கை, வால், மலை, உடல், கால்கள் எல்லாம் அப்படியே தத்ரூபமாக அமைந்தது. பிறகு அப்படியே கலைந்து மறைந்துவிட்டது. பிறகு, அதற்கான வேலைகள் ஸத்ஸங்கத்து அன்பர்கள் உதவியால் வேகமாக ஆரம்பித்து நடந்து வருகின்றன. இந்த வருடம் விஜயதசமி அன்று, நம் ஸ்வாமிகள் க்ருஷ்ணர் க்ருபையால் அந்த ஹனுமார் கோவிலுக்கு ஸம்ப்ரோக்ஷணம் செய்யவேண்டும் என்று ஸ்ரீ ஸ்வாமிஜி தீர்மானித்து உள்ளார்கள். பிறகு, பாடசாலை ஆரம்பித்து நடத்த வேண்டிய பணியும் வேகப்படுத்த வேண்டும் என்பது ஸ்ரீ ஸ்வாமிஜியின் அவா!

(தொடரும்)

**- டாக்டர் ஆ. பாக்யநாதன்**

ஸ்ரீ ஹரி:

## ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் சந்நதி

மஹாரண்யம் கிராமம், மலைப்பட்டு B.O. படப்பை. P.O. 601 301.

ஸ்ரீ பெரும்புதூர். T.K. காஞ்சி மாவட்டம்

ஸகல மங்களங்களையும் அருளும் வரப்ரஸாதியான மஹாரண்யம் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் சந்நதியில் பக்தர்களின் பிரார்த்தனைகள், ஒவ்வொரு சனிக்கிழமையன்றும் காலையில் பெருமாளிடம் விண்ணப்பிக்கப்படுகின்றன.

பக்தர்கள், தங்களது பிரார்த்தனைகளை தபால் தலை ஒட்டிய உறைமீது ''பிரார்த்தனைப் பெட்டி'' என்று குறிப்பிட்டு அனுப்பினால், பிரசாதம் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

பிரார்த்தனைப் பெட்டியில் கண்டிப்பாகக் காணிக்கைகள் எதுவும் செலுத்தக்கூடாது. பிரார்த்தனைகள் மட்டுமே பிரார்த்தனைப் பெட்டியில் ஏற்றுக்கொள்ளப்படும்.

-ராதே க்ருஷ்ணா-

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்

*கேள்வி : பிரார்த்தனையைத் தனியாகச் செய்வதைக் காட்டிலும் கூட்டாக செய்வதினால் என்ன வித்தியாசம் ?*

பதில் : இறைவனுடைய குழந்தைகளாகிய நாம் அனைவரும் ஓரிடத்தில் சேர்ந்து ஒரு மனதுடன் அவனுடைய பெயரைச் சொல்லி அழைத்து பிரார்த்தனைச் செய்யும்பொழுது அதற்கு பலம் அதிகம். பிரார்த்தனைகள் சுலபத்தில் நிறைவேறிவிடும்.

*கேள்வி : ஆரம்ப நிலையில் பக்தி செய்பவர்கள் ஒரு பரவச நிலையை அடைந்து, பித்துபிடித்தவர்களைப்போல் நடந்துக் கொள்கிறார்களே! இது ஏன்?*

பதில் : ஆரம்ப பக்தி நிலையில் அப்படியொரு நிலை ஏற்படத்தான் செய்யும். ஆனால், அப்பொழுது மிகவும் கவனமாக இருந்து அந்த பரவசத்தை அடக்கி, மனோலயத்தில் கொண்டுச் சென்றால், தெய்வீக முன்னேற்றம் ஏற்படும்.

*கேள்வி : ஒருவர், எந்தவிதமான ஜப தியானங்களும் செய்யாமல், குரு, தனக்கிட்ட கட்டளையை சிரமேற்கொண்டு செய்து வருகின்றார். மேலும், அவரை குரு எந்தவித ஜபமும், சாதனமும் செய்ய வேண்டாமென்று சொல்லிவிட்டார். அந்த பக்தரின் நிலை என்ன?*

பதில் : தகுந்த காலத்தில் குருவே அவருக்கு உயர்ந்த ஆன்மீக நிலையை தந்துவிடுவார்.

*கேள்வி : விதியை மதியால் வெல்ல முடியாது எனும்பொழுது தாங்கள் பிரார்த்தனைக் கூட்டம் நடத்துவது ஏன்?*

பதில் : விதியை மதியால் வெல்ல முடியாது என்பது உண்மை. ஆனால், விதியை இறைவனுடைய அருளால் வெல்லமுடியும். ஆகவேதான், பிரார்த்தனைக் கூட்டங்கள் நடத்துகின்றோம். இந்த பிரார்த்தனைக் கூட்டங்களில் கலந்துக்கொண்ட பக்தர்களின் பலரது பிரார்த்தனைகள் நிறைவேறியதே இதற்கு சாட்சியாகும்.

## மாதம் ஒரு புத்தகம்

ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், அடிக்கடி தம்முடைய உபன்யாஸங்களில், ''பரோக்ஷ ப்ரியா ஹிவை தேவா:'' அதாவது, 'தெய்வம் மறைந்திருப்பதையே விரும்புகின்றது' என்று சொல்வார்கள். இதன் உட்பொருள் என்னவென்றால், உள்ளம் உருகி உண்மையாக தன்னை நாடுபவனுக்கே தெய்வம் தன்னை வெளிப்படுத்தும் என்பதே!

ஆன்மீகத்தின் உச்சநிலையில் திளைத்துக்கொண்டிருக்கும் மஹாபுருஷர்களின் சங்கமும் ஆன்மீகத்தின் உயர் கருத்துக்களும் அவ்வளவு எளிதில் வெளிஉலகிற்கு கிடைத்துவிடுவதில்லை. குருவின் கருணைக்கு பாத்திரர்களான உண்மையான ஆன்ம வேட்கையை நாடுபவர்களின் கண்களுக்கு மட்டுமே புலப்படும் ஒரு ரகசிய உலகமாகவே அது திகழ்கின்றது. அப்படி ஒரு தீவிர வேட்கையுடன் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில், நமது இந்தியாவின் ரகசியமான பொக்கிஷங்களான ஞானிகளையும், யோகீஸ்வரர்களையும் தேடி முடிவில் பகவான் ரமணரை சரணடைந்த ஒரு மேற்கத்தியரின் பயணக் குறிப்புகளின் தொகுப்பே 'A SEARCH IN SECRET INDIA-PAUL BRUNTON' என்ற நூல்.

இதில் என்ன ஆச்சரியம் என்றால், இந்தியாவின் மீதும் மஹாபுருஷர்களின்மீதும் கொண்ட விவரிக்கமுடியாத காதலினால், தனக்கு எவ்விதத்திலும் தொடர்பில்லாத, ஒத்துவராத, உணவு, உடை, மொழி, பழக்கவழக்கங்கள், தட்பவெப்பநிலை, கலாச்சாரமுடைய இந்தியாவில் இமயம் முதல் குமரி வரை அலைந்து, திரிந்து, சித்து விளையாடல்கள் புரிபவர்கள், மாயாஜாலம் செய்பவர்கள், யோக சாதனை பழகுபவர்கள், அசாத்தியமான மனவலிமையுடையவர்கள் என்று எத்தனையோ பேரைப் பார்த்தும் மயங்கிவிடாமல், இறுதியில் பகவான் ரமண மஹரிஷியையே குருவாக 'பால் ப்ரண்டன்' அடைந்ததே!

மரத்தடியிலும், சாலையோரத்திலும் அமர்ந்து அதிசயிக்கத் தக்க மாயாஜாலங்கள் புரிபவர்களிலிருந்து துவங்கி அன்றைய காலகட்டத்தில் பிரபலமாக இருந்த குருமார்கள்வரை எத்தனையோ

பேரை நேரில் பார்த்து, இறையனுபவத்தில் எப்பொழுதும் ஆழ்ந்திருந்த மூன்று மஹாபுருஷர்களை அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது நமக்கு வியப்பை அளித்ததோடு மட்டுமல்லாமல், அவரது இறைவேட்கை உண்மையானது என்பதை நமக்கு தெளிவாக உணர்த்துகின்றது. அந்த மூன்று மஹான்கள்- காஞ்சி மஹாபெரியவர் ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள், ஸ்ரீ ராமக்ருஷ்ணரின் அமுத மொழிகளை (GOSPEL OF SRI RAMAKRISHNA) தொகுத்த ஸ்ரீ மஹேந்திரநாத் குப்தா மற்றும் பகவான் ஸ்ரீ ரமணர்.

ஸ்ரீ மஹேந்திரநாத்குப்தரை தரிசித்த அனுபவத்தைப் பற்றி PAUL BRUNTON குறிப்பிடும்பொழுது, பைபிளின் (BIBLE) பக்கங்களிலிருந்து ஒரு மஹான் உருவெடுத்து வந்தது போலிருந்தது என்று எழுதுகின்றார்.

PAUL BRUNTON, ஸ்ரீ மஹேந்திரநாத்குப்தரிடம், ''நம்பிக்கை அடிப்படையில் வாழாமல், எதையுமே புத்திபூர்வமாக புரிந்து கொள்ள முனைபவனுக்கு என்ன வழி?'' என்று கேட்க, அதற்கு அவர். ''இறைவனிடம் உள்ளம் உருகி பிரார்த்தனை செய்வதே வழி! ''PRAYER WILL HELP A MAN, WHERE INTELLECT MAY FAIL!" என்கின்றார். ''நீங்கள் சொல்லும் பிரார்த்தனையிலும் நம்பிக்கை இல்லாதவனுக்கு என்ன கதி?'' என்று PAUL BRUNTON வினவ, ஸ்ரீ மஹேந்திரநாத்குப்தர், ''அவனுக்கு ஒரே வழி ஸத்குருவின் சங்கமே. ஸத்ஸங்கமே ஆன்மீகத்தின் முதலும், முடிவும்!'' என்று சொல்கின்றார்.

**– டாக்டர் ஆ. பாக்யநாதன்**

13-4-2007 முதல், ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளில், இரவு 11 மணிக்கு சென்னைத் தொலைக்காட்சி-பொதிகையில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் **'ஆத்ம தரிசனம்'** ஒளிப்பரப்பு ஆகும்.

'சக்தி விகடன்' ஆன்மீக இதழில், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் **'தினம் தினம் திருநாளே!'** என்ற ஆன்மீக தொடர் வெளிவருகிறது.

- ஆசிரியர்.

# யூத மதமும், யூதர்களும் - ஒரு சிறிய அறிமுகம்

*- சென்ற இதழ் தொடர்ச்சி*

*மதுரமுரளியில் நம் ஸனாதன மதத்தைப் பற்றிய பல அரிய விஷயங்கள் மற்றும் வேதம், இதிஹாஸம், புராணம் இவற்றின் சாரம் முதலியவை ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருள்மொழிகள் பகுதியில் இடம் பெற்று வந்துள்ளன.*

*'உலகின் புராதனமான மற்ற மதங்கள், கலாசாரங்கள் பற்றியும் ஓர் சிறிய அறிமுகம் நம் மதுரமுரளியில் இடம் பெறவேண்டும்' என்பது ஸ்ரீ ஸ்வாமிஜியின் அவா. அதன்படி யூதமதத்தைப் பற்றிய ஒரு சிறிய அறிமுகத்தை டாக்டர் ஆ. பாக்யநாதன் கொடுத்திருக்கின்றார்.* *-ஆசிரியர்*

**உணவு நியமங்கள் :**

உணவு விஷயமாக விதிக்கப்பட்டுள்ள நியமங்களுக்கு காஷ்ருட் (KASHRUT) என்று பெயர். யூத கோட்பாடுகளின்படி தயாரிக்கப்பட்ட உணவு கோஷர் (KOSHER) என்றும், அப்படியில்லாத உணவு ட்ரெய்ஃபா (TREIFAH) என்றும் வழங்கப்படுகிறது. இந்த நியமங்கள் வழிபாட்டிற்கு வேண்டிய புனிதத்துவம் மற்றும் ஆரோக்யத்தை அடிப்படையாகக்கொண்டு விதிக்கப்பட்டுள்ளன. KASHRUT-ன்படி பிற உயிர்களைக் கொல்லும் விலங்குகளையும், கடலின் ஆழத்தில் வாழ்ந்துகொண்டு பிற பிராணிகளின் கழிவுகளை உண்ணும் உயிரினங்களையும் உண்ணக்கூடாது. புனிதத்துவத்தை முன்னிட்டு தெரிந்த இடத்திலிருந்து பொருட்களை வாங்கி, தெரிந்தவர்கள் தயாரித்த உணவையே உட்கொள்ள வேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு செய்யத் தவறினால், ஆன்மீக கோணத்தில் விரும்பத்தகாத விளைவுகள் ஏற்படும் என்று யூதர்கள் நம்புகின்றார்கள்.

**பிரிவுகள் :**

ஐரோப்பாவிலிருந்த யூதர்களை முக்கியமாக இரு பிரிவுகளாக பிரித்துவிடலாம். மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பாவிலிருந்த

யூதர்கள் ஆஷ்கெனாஸி (ASHKENAZI) பிரிவைச் சேர்ந்தவர்கள். ஸ்பெயின், போர்சுகல் ஆகிய மெடிட்டேரேனியன் (MEDITERRANEAN) தேசங்களைச் சேர்ந்த யூதர்கள் ஸெப்பார்டிக் (SEPHARDIC) பிரிவினர். அடிப்படை மதக்கோட்பாடுகளில் ஒத்திருந்தாலும், இந்த இரு பிரிவுகளிடையேயும் மதச் சடங்குகளில் வேறுபாடுகள் உண்டு. இவைத் தவிர ஹாஸிடிக் (HASIDIC) பிரிவு என்ற ஒன்று கிழக்கு ஐரோப்பா, வட ஆப்பிரிக்கா, மற்றும் சில ஆசிய நாடுகளில் உண்டு. சம்பிரதாயங்கள் மற்றும் நம்பிக்கைகளின் அடிப்படையில் பார்த்தோமானால், சென்ற நூற்றாண்டிலிருந்து நவீன வாழ்க்கை முறையின் காரணமாக பழைய பாரம்பரியங்களிலிருந்து சிறிது சிறிதாக விலகும் ஒரு போக்கு காணப்படுகின்றது. இதன் காரணமாக பல புதிய பிரிவுகள் உருவாகியுள்ளன.

ORTHODOX JEWS : இந்த பிரிவினர் டோராவில் கூறப் பட்டுள்ள கோட்பாடுகளை சிறிதும் விட்டுக்கொடுக்காமல் அதன்படி அப்படியே வாழ்பவர்கள். உணவு விஷயங்களில் கோஷர் (KOSHER) நியமங்களை தவறாமல் கடைப்பிடிப்பவர்கள். வழிபாட்டுத் தலத்தில் (SYNAGOGUE) பெண்கள் தனியாக பிரிக்கப்படுவார்கள்.

REFORM JEWS : இந்த பிரிவினர் கோஷர் நியமங்களை உணவு விஷயத்தில் முழுமையாக கடைப்பிடிப்பதில்லை. அதேபோல், டோராவில் சொல்லப்பட்டுள்ள கோட்பாடுகளை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல், புத்திபூர்வமாக அலசிய பின்னரே பின்பற்றுவர். வழிபாட்டு தலத்தில் பெண்கள் தனியாகப் பிரிக்கப்படுவதில்லை.

CONSERVATIVE JEWS : முன்கூறப்பட்ட இரு பிரிவுகளுக்கும் இடையிலுள்ள பிரிவு இது. இன்றைய நவீன வாழ்க்கைமுறைக்கு ஏற்ற சில மாற்றங்களோடு, டோராவில் சொல்லியபடி வாழ்பவர்கள் இந்த பிரிவைச் சேர்ந்தவர்கள்.

இந்த மூன்று பிரிவுகள் தவிர "LIBERAL JEWS" என்ற நவீனமான சிந்தனைகள் உடைய ஒரு பிரிவும் உண்டு.

(தொடரும்)

# குருவாயூரப்பனும், பாகவத ஸப்தாஹமும்

எல்லா க்ஷேத்ரங்களிலும் உள்ள பகவான் ஸ்ரீ க்ருஷ்ணனாக இருந்தாலும், விசேஷமாக, குருவாயூரில், உள்ள குருவாயூரப்பன் ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹத்தினால் ப்ரீதி அடைகிறான். ஏன் குருவாயூரப்பன் பாகவத ஸப்தாஹத்தினால் ப்ரீதி அடைகிறான்? பண்டரீயில் இருக்கும் பாண்டுரங்கனும் ஸ்ரீ க்ருஷ்ணன் தானே! அவன் ஸப்தாஹம் கேட்க மாட்டானா? பத்ரீயில் இருக்கும் பதரீ நாராயணன் பாகவதம் கேட்க மாட்டானா? நைமிசாரண்யம்தானே புராண பிரவசனங்கள் எல்லாம் நடந்த இடம்? அங்குள்ள பெருமாள் பாகவதம் கேட்கமாட்டாரா? த்வாரகாதீசன் பாகவதம் கேட்க மாட்டானா? என்றால் - குருவாயூரப்பன் யார் என்று பார்த்தோமானால், இதற்கு பதில் கிடைக்கும்.

குருவாயூரில் உள்ள குருவாயூரப்பன் சாக்ஷாத் உத்தவன் பூஜை செய்த மூர்த்தி. ஸ்ரீ க்ருஷ்ணாவதாரத்தில், க்ருஷ்ணன் மதுரா வருவதற்கு முன்பே, உத்தவன் சிறுவயதிலேயே ஒரு க்ருஷ்ண விக்ரஹத்தை வைத்துக்கொண்டு உத்ஸாஹமாக, உத்ஸவங்கள் எல்லாம் செய்து கொண்டாடி விளையாடுவானாம். அதன் பிறகு, ப்ரத்யக்ஷமான க்ருஷ்ணன் வந்தான். சிறிது காலத்திற்குப் பிறகு, க்ருஷ்ணன் மதுராவை விட்டு கிளம்பியும்விட்டான். ஆனால், அர்ச்சாவதாரத்தில் இருந்த அந்த கண்ணன், உத்தவனைப் பிரியவே இல்லை. அந்த க்ருஷ்ணன்தான் குருவாயூரில் ப்ரதிஷ்டையாகி இன்றும் ப்ரகாசமாக நிற்கின்றான்.

பகவான் வைகுண்டம் போகும்போது, உத்தவனைப் பார்த்து - ''என் லீலைகளை அனுகரணம் செய். என்னை பஜனம் செய்'' என்று கூறிவிட்டுச் சென்றான். அதனால் உத்தவன், அர்ச்சாவதாரத்தில் இருக்கும் தன் நாதனான கண்ணனிடம், ''கண்ணா! நீ இப்படிதானே மாடு மேய்த்தாய்! இப்படிதானே ராஸம் செய்தாய்! இப்படிதானே கோவர்த்தனோத்தாரணம் செய்தாய்! இப்படிதானே குழலூதினாய்! என்றெல்லாம் **பா**வத்துடன் அனுகரணம் செய்து ஸ்ரீமத் பாகவதத்தை சொல்லி சொல்லி பூஜை செய்தான்.

எதுவுமே நமக்கு பழக்கமாகிவிட்டால், அதைத்தானே மனது ஆசைப்படும். அப்படி உத்தவன், ஸ்ரீமத் பாகவதம் சொல்லி சொல்லி பழக்கப்படுத்தியதால், அதில் ருசி ஏற்பட்டு, இன்றும் யாராவது பாகவதம் சொல்ல மாட்டார்களா என்று குருபவனபுரத்தில் குருவாயூரப்பன் ஆவலாக காத்துக்கொண்டிருக்கிறான். அதனால், குருவாயூரில் யாராவது பாகவத ஸப்தாஹம் செய்தால், குருவாயூரப்பன், அவர்களுக்கு தன்னையே தர தயாராக இருக்கின்றான்.

ஸ்ரீ ஹரி

**சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு**

அன்பார்ந்த மதுரமுரளி வாசகர்களே!

மதுரமுரளி தெய்வீக மாதப் பத்திரிகைக்குத் தாங்கள் அளித்து வரும் ஆதரவிற்கு எங்கள் நெஞ்சார்ந்த நன்றி!!

சந்தாதாரர்கள், தங்களது சந்தா தொகையை, **சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ரா** என்ற பெயரில் மட்டுமே

New No. 51, Old No. 24, 7th Avenue,
Ashok Nagar, Chennai - 600 078, Telephone: 044 - 24895875,
email ID : publications@madhuramurali.org
என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

| | |
|---|---|
| உள்நாடு | : ஆண்டு சந்தா ரூ. 120/– |
| ஆயுள் சந்தா | : ரூ. 2000/- (20 வருடங்கள்) |
| வெளிநாடு-வருடச் சந்தா | : ரூ. 600/- |

**ஸ்ரீ ஸ்வாமிஜிக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை**

Personal Secretary to

**H.H. SRI SRI MURALIDHARA SWAMIJI**

New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83
Telephone : 044-24895875, email ID : contact@madhuramurali.org
என்னும் முகவரிக்கு அனுப்பவும்.

# பாலகர்களுக்கு ஒரு கதை - 108

ஒரு ஊரிலே ஒரு நாய் இருந்தது. அந்த நாய்க்குத் தொண்டையிலே ஏதோ ஒரு பிரச்சினை. அதனால், அந்த நாயால் முன்போல் குரைக்க முடியவில்லை. எப்போதும் குரைக்காமல் இருந்தது. மற்ற நாய்களெல்லாம் அதனைப் பார்த்து, 'நீ ஏன் குரைக்காமல் இருக்கிறாய்?' என்று கேட்டன. அந்த நாய் யோசித்தது - ''எனக்குத் தொண்டையிலே வியாதி. அதனால், குரைக்க முடியவில்லை என்று சொன்னால் கூடியிருக்கக்கூடிய நாய்கள் நம்மை ஏளனமாக நினைக்கும். வியாதி உள்ள நாய் என்று நம்மைத் தனிமைப் படுத்தும்'' என்று நினைத்தது. ஆகவே, அந்த நாய் ஒரு தந்திரம் செய்தது. என்ன தந்திரம்? என்ன சொன்னது தெரியுமா? 'நான் இப்போது ஞானியாகிவிட்டேன். ஞானி எப்படி இருப்பான்? மௌனமாக இருப்பான். பேசமாட்டான். அதனால் நான் குரைப்பதில்லை!' என்றது.

'ஆ! நீ ஞானியாகிவிட்டாயா? பெரும் பேறு. ஞானியாகிய நீ எங்களுடன் இருப்பது நாங்கள் செய்த முற்பிறவி புண்ணியம். எவ்வளவு பெரிய புண்ணியம் செய்திருந்தால் ஞானியாகிய உன்னுடன் சேர்ந்து நாங்கள் வாழ முடியும்? எவ்வளவு புண்ணியம் செய்திருக்கின்றோம். நாங்கள் பெற்ற பேறு'' என்று மற்ற நாய்கள் கொண்டாடி மகிழ்ந்தன.

அந்த நாயைப் பார்த்து மற்ற நாய்கள், ''நாங்கள் ஞானம் அடைவதற்கு என்ன செய்ய வேண்டும்?'' என்று அறிவுரை கேட்டன. அந்த நாய் சொல்லிற்று, 'நீங்களெல்லாம் குரைக்கக்கூடாது. மௌனமாக இருக்கவேண்டும். குரைக்காமல் மௌனமாக இருந்தால் ஞானியாகிவிடலாம்' என்றது.

மற்ற நாய்களெல்லாம் முயற்சி செய்து பார்த்தது. நாயால் குரைக்காமல் இருக்கமுடியுமா? ஒவ்வொரு வீதியிலும் நாய்கள் இருக்கும்போது அது தனக்கென்று ஒரு எல்லையை வகுத்துக் கொண்டிருக்கின்றன. அந்த எல்லைக்குள் புது நாய் வந்தால் மற்ற நாய்கள் குரைக்கும். அதை விரட்டிவிடும். விசித்திரமாக ஆடையணிந்து வருபவர்களைப் பார்த்தால் நாய்கள் குரைக்கும். நாய்களுக்குக் குரைப்பது என்பது இயல்பு. ஆதலால், அந்த நாய்களுக்கு தங்களது இயல்பை அதாவது குரைப்பதை

மாற்றிக்கொள்ள முடியவில்லை. ‘‘அந்த ஞானியான நாய் நமக்கு உபதேசம் செய்திருக்கின்றது. அதனால், நாம் குரைக்கக்கூடாது. குரைக்காமல் இருக்க வேண்டும்’’ என்று நினைத்துக்கொள்ளும். ஆனால், சந்தர்ப்பங்கள் வரும்பொழுது, தங்களை மறந்து குரைத்து விடும்.

இப்பொழுது, ஞானியாக வேஷம் போட்டுக்கொண்டிருக்கின்றதே ஒரு நாய், அதற்குத் தொண்டையிலே இருந்த அந்தப் பிரச்சினை சரியாகிவிட்டது. இப்பொழுது, அந்த நாயால் குரைக்கமுடியும். குரைக்க முடிந்தால்கூட, ‘‘நாம் குரைக்காமல் இருப்பதால்தானே ஞானி என்ற ஒரு பட்டத்தை வாங்கியிருக்கின்றோம். அதனால்தானே மற்ற நாய்கள் நம்மை மரியாதையாக நடத்துகின்றன. நம்மைப் பார்த்து ஆச்சரியப்படுகின்றன. அவற்றிலிருந்து நம்மை வித்தியாசமாகப் பார்க்கின்றன. ஆகவே, இந்த மதிப்பையும் கௌரவத்தையும் நாம் இழந்துவிடக்கூடாது. காப்பாற்றிக் கொள்ளவேண்டும். காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்றால் என்ன செய்யவேண்டும்? நம்மால் இப்போது குரைக்க முடிந்தால்கூட நாம் குரைக்காமல் இருக்க வேண்டும்’’ என்று தீர்மானித்தது.

குரைக்காமல் இருக்க வேண்டுமென்பதைவிட இந்த நாயின் கவனம் எப்படி இருந்ததென்றால் ஏதாவது ஒரு நாய் குரைத்தால் வேகமாக அந்த நாயிடம் ஓடும். ‘‘பார்த்தாயா? நீ என்னிடம் வந்து ஞானத்தை எப்படி அடையவேண்டும் என்று கேட்டாய். நான் என்ன உபதேசம் செய்தேன்? குரைக்கக்கூடாது என்று உபதேசம் செய்தேன். நீ குரைத்துவிட்டாயே. இப்படிக் குரைத்துவிட்டது உனக்கு அவமானமாக இல்லை? உன்னுடைய மனதை உன்னால் கட்டுப்படுத்த முடியவில்லை? இப்படி இருந்தால் நீ எப்படி ஞானியாவாய்? அற்பனே! அற்ப நாயே!’’ என்று பலவாறு அந்த நாயை ஏசும். அந்த நாயும் வெட்கித் தலை குனிந்து உலகத்திலேயே ஏதோ மாபெரும் குற்றம் செய்ததைப்போல் தலையைத் தொங்கப் போட்டுக் கொள்ளும். இப்படியாக சிறிது காலம் சென்றது.

ஒரு நாள் அந்த நாய்களெல்லாம் சேர்ந்து ஒரு கூட்டம் நடத்தியது. அந்தக் கூட்டத்திலே, ‘‘நம்முடைய ஞானியான நாய், நமக்கெல்லாம் குருவாக இருக்கக்கூடிய அந்த நாய், பெரும் பேறு பெற்ற அந்த நாய் என்ன சொன்னது? நாமெல்லாம் குரைக்கக் கூடாது. குரைக்காமல் இருந்தால் ஞானியாகிவிடலாம் என்று சொன்னது. ஆனால், நம்மால் குரைக்காமல் இருக்க முடியவில்லை. என்ன

செய்யலாம்?'' என்று என்று அந்தக் கூட்டத்திலே ஆலோசனை செய்யப்பட்டது. நாய்கள் எப்போது குரைக்கும்? வானத்திலே சூரியனைப் பார்க்கும்போது. சூரியனைப் பார்த்து நாய் குரைப்பது போன்று என்று சொல்வார்கள். அதுபோல், பௌர்ணமி நிலவு வந்தாலும் அந்த நிலவைப் பார்த்தவுடன் நாய்கள் குரைக்கும்.

மறுநாள் பௌர்ணமி. இந்தக் கூட்டத்திலே அந்த நாய்களெல்லாம் என்ன முடிவு செய்தன என்றால், 'நாளை பௌர்ணமி. முழு நிலவு வானத்திலே வரும். அப்படி முழு நிலவு வானத்திலே வரும்போது நாம் குரைக்ககூடாது.' ஒரு நாய் கேள்வி கேட்டது. ''நிலவைப் பார்த்தால் நாம் குரைத்து விடுவோமே. நிலவைப் பார்த்து எப்படிக் குரைக்காமல் இருக்க முடியும்? அப்படிக் குரைக்காமல் இருப்பதற்கு நாம் ஏதாவது உபாயத்தைக் கைக்கொள்ள வேண்டும்'' என்றது. அந்தக் கூட்டத்திலே என்ன முடிவு செய்யப்பட்டதென்றால், ''நிலவு வருவதற்கு முன்பே நாம் ஏதாவது பதுங்கு குழிகளிலே, மறைவான இடத்திலே கட்டடத்திற்குள்ளே அல்லது வீட்டிற்குள்ளே மறைந்துகொள்ள வேண்டும். நம்முடைய கண்களுக்கு இந்த நிலவு தெரியக்கூடாது. நிலவைப் பார்த்தால்தானே நமக்குக் குரைக்கத் தோன்றும்?'' அதனால், நிலவைப் பார்க்காமல் இருந்துவிடுவது நல்லது'' என்று நினைத்தன.

அந்த நாய்கள் எதிர்பார்த்த பௌர்ணமியும் வந்தது. நிலவும் வந்தது. நிலவு வருவதற்கு முன்பாக எல்லா நாய்களும் ஓடி ஒளிந்து கொண்டன. நிலவு வந்ததும் இந்த ஞானியான நாய் என்ன நினைத்துக்கொண்டிருக்கிறது என்றால், 'ஆஹா! நிலவு வானத்திலே வரும். நிலவு வானத்திலே வந்தவுடன் இந்த நாய்களெல்லாம் தன்னை மறந்து குரைக்கும். பெரிய குரைப்புச் சத்தம் கேட்கப் போகின்றது. அந்த நேரத்திலே நாம் என்ன செய்யலாம் என்றால் ''எந்த நாயெல்லாம் குரைக்கின்றதோ அந்த நாயிடம் சென்று, 'முட்டாளே! மடையனே! அற்ப சக்தியுடையவனே! எதற்கும் தகுதியில்லாதவனே! பார்த்தாயா? குரைத்துவிட்டாய். இப்படிக் குரைத்தால் நீ எப்படி ஞானியாவாய்?' என்று உபதேசம் செய்யலாம். மிரட்டலாம்'' இப்படி உபதேசம் செய்து மிரட்டினால் நம்முடைய மேன்மையை நிலைநிறுத்திக்கொள்ளலாம்'' என்றெல்லாம் நினைத்துக் கொண்டிருந்தது.

நிலவு வானத்திலே வந்ததும் இந்த ஞானியாக நடித்துக் கொண்டிருக்கும் நாய்க்கு ஒரே சந்தோஷம். நிலவு வந்து கொண்டிருக்கிறது வானத்திலே. இப்பொழுது ஒவ்வொரு நாயாகக் குரைக்க ஆரம்பிக்கும். அப்படிக் குரைத்தவுடன் நாம் சென்று உபதேசம் செய்யலாம் என்று எதிர்ப்பார்த்துக்கொண்டிருக்க, ஏற்கனவே அவைகள் கூட்டம் போட்டுத் தீர்மானித்தபடி ஒவ்வொரு இடத்திலே ஒளிந்துகொண்டிருப்பதால் எந்த நாயிடமிருந்தும் எந்தக் குரைப்பு சத்தமும் வெளிப்படவேயில்லை.

குரைப்பு சப்தம் ஏற்படாததைப் பார்த்தவுடன் இந்த நாய்க்குக் காத்துக் காத்துப் பார்த்திருந்து ஒரு ஏமாற்றம். ''என்ன இது? விசித்ரமாக இருக்கின்றது. நாய்களெல்லாம் குரைக்கும் என்று பார்த்தால் இந்த நாய்களெல்லாம் குரைக்கவில்லையே! ஒரே விசித்ரமாக இருக்கின்றதே' என்ன ஆச்சரியம் என்று இந்த நாய் பார்த்தது. ஒருக்கால் பௌர்ணமி நிலவு வானத்திலே வரவில்லையோ? நிலவு முழுமையாகத் தெரியவில்லையோ? மேகத்தினால் மறைக்கப் பட்டிருக்கின்றதோ? நிலவு முழுமையாக வானத்திலே தெரியாததால் தான் இந்த நாய்களெல்லாம் குரைக்கவில்லையோ! இந்த நாய்களெல்லாம் குரைக்காததால் நமக்கு அந்த நாய்களிடம் சென்று உபதேசம் செய்யக்கூடிய வேலை இல்லாமல் போய்விட்டதே. நம்முடைய மேன்மையை மீண்டும் நிலைநிறுத்திக்கொள்ள சந்தர்ப்பம் இல்லாமல் போய்விட்டதே'' என்று தவித்தது. நிலவு வானத்திலே வந்திருக்கின்றதா இல்லையா என்று பார்ப்போம் என்று ஆகாயத்தைப் பார்த்தது. முழு நிலவைப் பார்த்தது. முழுநிலவைப் பார்த்தவுடன் தன்னை மறந்து குரைக்க ஆரம்பித்துவிட்டது.

குரைக்க ஆரம்பித்தவுடன் பதுங்கியிருக்கக்கூடிய மற்ற நாய்களெல்லாம், நேற்று நாம் கூட்டத்திலே என்ன முடிவு செய்தோம். நிலவு வரும்போது குரைக்கக்கூடாது என்றுதானே! நேற்று தீர்மானம் செய்ததை மீறி, அவமதித்து, குரைத்த நாயைக் கண்டுபிடித்து தண்டனை கொடுக்க வேண்டும் என்பதற்காக ஒருசேர எல்லா நாய்களுமாக வெளியில் வந்து பார்த்தால், ஞானியான நாய் குரைத்துக்கொண்டிருக்கின்றது.

மற்ற நாய்களுக்கெல்லாம் ஒரே ஆச்சரியம். அவை அந்த ஞானி வேடமிட்ட நாயிடம் போய், 'ஏ ஞானியாரே! நீர் ஏன் குரைத்தீர்? என்னவாயிற்று உங்களுக்கு? ஏன் குரைத்தீர்' என்று கேட்டவுடன் அந்த ஞானியான நாய் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டது அவமானத்தால்.

# மாலே மணிவண்ணா - 51

*குழலூதல் சிறப்பு....*

பகவான் குழல் ஊதுவதில் வல்லவர் அல்லவா! குழலூதல் சிறப்பு என்றே பெரியாழ்வார் பதினொரு பாசுரங்களைப் பாடியிருக்கிறார். ஆகாயத்தில் திரியும் கந்தருவர்கள் (இசை வல்லவர்கள்) எல்லாம் பெருமானது இசைவலையால் சுருக்குண்டு 'நம்மால் முடியக் கூடியதல்ல. இவ்விசை' என்று வெட்கமுற்று மயங்கி நின்றார்கள் என்கிறார்.

*''அம்பரம் திரியும் காந்தர்ப்பர் எல்லாம்*
*அமுத கீத வலையால் சுருக்குண்டு*
*நம்பரம் அன்று என்று நாணி, மயங்கி,*
*நைந்து, சோர்ந்து, கை மறித்து, நின்றனரே''*

(பெரி.திருமொழி.3.6)

இவர்களாவது இசை அறிந்தவர்கள்; பாடுபவர்கள்! ஆனால், இசைச் சக்கரவர்த்திகள். யாழ், வீணை, இசையில் தன்னிகரற்றவர்கள் ஆகிய தும்புரு, நாரதர்கள் தம் வீணை மறந்தார்களாம்!

*''குழலின் ஓசை செவியைப் பற்றி வாங்க*
*நன்னரம்புடைய தும்புரு வோடு*
*நாரதனும் தம்தம் வீணை மறந்து''*

என்கிறார் பெரியாழ்வார். (பெரி. திருமொழி. 3.5)

பட்ட மரங்களைத் துளிர்விடச் செய்யும் பகவானின் குழலோசை யாழ் (வீணை) இசையை விஞ்சி நிற்கிறது என்னும் போது பகவானை,

''நல்லியாழ்ப்பாண'' என்று பரிபாடல் தோத்திரம் செய்வதில் வியப்பில்லை அல்லவா? - யாழிசையில் பகவானை இடையறாது பரவுகின்றவர் திருப்பாணாழ்வார். ''பாம்பின்கால் பாம்பறியும்'' என்றபடி யாழிசையில் சிறந்து விளங்கித் தாமே பாணராக இருந்த

பகவான், தம்மைப்போலவே யாழிசை வேந்தராக விளங்கிய திருப்பாணாழ்வாரிடத்திலே பெருங்காதல் கொண்டார். ஸ்ரீ லோக சாரங்கமுனிவரர் என்கிற ஜீயரை அழைத்து, ''ஜீயரே! நமக்கு மிகவும் அந்தரங்கரான பாணர் பெருமானை உமது தோளில் ஏற்றிக்கொண்டு, நம்பக்கம் விரைந்து கொண்டுவரவேண்டும்'' என்று சொப்பனம் மூலமாக அருளிச் செய்தார் என்பதைக் காணும்போது பாணரிடத்திலே அவருக்கிருந்த அளவு கடந்த கருணைப்பெருக்குப் புலனாகிறது. அவரே இசையில் வல்லவர்; குழலிசையில் வல்லவர்; யாழிசையிலும் வல்லவர்! யாழிசையில் இடையறாது தம்மை இன்புறுத்துவாரிடத்தில் அவருக்கு மிகவும் விருப்பம் உண்டு என்பதையெல்லாம் உள்ளடக்கியதே

'நல்லியாழ்ப்பாண' என்று பரிபாடல் பகவானை அழைக்கின்ற இத்தோத்திரம் என்பதை அறியலாம்.

''குடமாடும் கூத்தன்!'' என்று நாட்டிய நாடகத்தில் பகவான் சிறந்து விளங்கியவன் என்பதை அறிந்தோம்;

காலத்தால் முந்தைய இந்தத் தோத்திரங்கள் பெருமானுடைய இயல்புகள் மாறாதவை என்பதை உலகிற்கு விளக்கி ஆழ்வார்கள் சரித்திரத்தால் மேலும் உறுதிபெற்று இயல், இசை, நாடகம் என்ற மூன்று துறைகளிலும் பெருமானது சிறப்பை விளக்கி நிற்கின்றன.

(தொடரும்)

ஸ்ரீ ஹரி:

**ஸ்ரீ ஸ்ரீதர அய்யாவாள் அன்னதானக் கூடம் - மதுரபுரி**

ஸ்ரீ சாந்தீபனி குருகுல ட்ரஸ்ட் சார்பில், மஹாரண்யம் மதுரபுரி, ஸ்ரீ ஸ்ரீதர அய்யாவாள் அன்னதானக் கூடத்தில் தினமும் நண்பகல் 12 மணியளவில் கிராமப் பொதுமக்களுக்கு அன்னதானம் நடைபெற்றுக் கொண்டு வருகின்றது.

மஹாரண்யம், மலைப்பட்டு, அழகூர் மற்றும் பல கிராமங்களில் இருந்து வரும் பொதுமக்கள் இந்த அன்னதானத்தினால் பயனடைகின்றனர்.

- Trustees

ஸ்ரீ ஹரி:

**ஸ்ரீ ஸ்வாமிஜியின் நூல்கள் :**

ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரைகள், துளஸீ தளங்கள்

**H.H. Sri Sri Muralidhara Swamiji's discourse series in Tamil : Cassettes, Audio CDs, VCDs**

| | |
|---|---|
| 1. நாம மஹிமை | Audio CD |
| 2. ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸர் | Cassettes, Audio CDs |
| 3. திருவலம் ஸ்வாமிகள் | Cassettes, Audio CDs |
| 4. பாம்பன் ஸ்வாமிகள் | Cassettes, Audio CDs |
| 5. கலிகால உசிதம் தர்மம் - 2007 புத்தாண்டில் ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரை (தமிழில்) | Cassette, Audio CD |
| 6. மஹாமந்திர கூட்டுப்பிரார்த்தனை (தமிழில்) | VCD |
| 7. MahaMantra Mass Prayer - 2007 (Clippings of H.H. Sri Sri Swamiji's talk in Tamil with captions in English) | VCD |

**கீர்த்தனங்கள் :**

| | |
|---|---|
| 1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனங்கள் | Cassettes, Audio CDs |
| 2. மஹாமந்திரம்-அகண்ட நாமகீர்த்தனம் | Cassette, Audio CD |
| 3. ஸ்ரீ ஸ்வாமிஜி அருளிய 'கலிதர்மஉந்தியார்' | Cassette, Audio CD |
| 4. மஹாமந்திர கீர்த்தனம் -ஸ்ரீ ஸ்வாமிஜியின் மதுரமான குரலில் | Cassette, Audio CD |
| 5. பஞ்ச கீதங்கள் | Cassette, Audio CD |

| | |
|---|---|
| H.H. Sri Sri Muralidhara Swamiji's 'Kali Dharma Undhiyar' (Lecture in English) by Dr. A. Bhagyanathan (Live Recording) | MP3, Audio, CD |

**கிடைக்குமிடம் :**

**CHAITANYA MAHAPRABHU NAMABHIKSHA KENDRA,**

*Admin. Office :* New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 600 083 Phone : 044-24895875

For queries regarding, Madhuramurali, Books, Audio tapes & CDs kindly send e-mail to "publications@madhuramurali.org"

# பிருந்தாவனமும் நந்தகுமாரனும்

ஸ்ரீ மாதவதாஸ்பாபா, வங்க தேசத்தின் பார்கரியா கிராமத்தில் 1857 இல் பிறந்தார். சிறுவயதிலேயே தந்தையை இழந்து விட்டதனால், அவரால் கல்வி கற்க முடியாமல் போயிற்று. இருந்தாலும், பக்தி நூல்களை படிக்குமளவிற்கு அவருக்கு எழுத்தறிவு இருந்தது. கீர்த்தனத்திலும், ஸத்ஸங்கத்திலும் அவர் அதிகநேரம் செலவழித்தார்.

மாதவதாஸ்பாபாவிற்கு சுத்தமான வைஷ்ணவர்களுடைய ஸங்கத்தில் நாட்டம் இருந்தது. ஆகையால், 27வது வயதில் தன் குடும்பத்தை விட்டு பிருந்தாவனம் சென்றுவிட்டார். அங்கு சிருங்கார வடத்தில் ஸ்ரீ பரமானந்தப்ரபுபாதருடைய சரணங்களை ஆச்ரயித்து பஜனை செய்யலானார்.

பிருந்தாவனத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தபிறகு, வ்ரஜ கிராமங்களில் சஞ்சாரம் செய்ய விரும்பி, அதற்கான யாத்திரையை மேற்கொண்டார். அங்குள்ள ஸ்ரீ ஜகந்நாததாஸ்பாபாவினுடைய வைராக்யத்திலிருந்து பல பாடங்களைக் கற்றார். இருவரும் தனித்தனியாக மதுகரிக்குச் செல்வார்கள். இரவில் இருவரும் சேர்ந்து உண்பார்கள்.

ஒருநாள் மாதவதாஸ், ‘இந்த ஆகாரத்தில் சற்று உப்பு இருந்தால் நன்றாக இருக்கும்; நான் போய் சிறிது உப்பு பெற்று வருகிறேன்’. என்றார். ஜகந்நாததாஸ் அவரிடம், ‘‘ஜாக்கிரதை! உப்பைப் பெற இன்று சென்றால், நாளை மனம் கொஞ்சம் வெல்லம் கேட்கும். இப்படியே மனம் இழுத்துச் சென்றுவிடும். உப்பில்லாமல் உண்டால் அதுவே பழகிவிடும்’’ என்றார்.

ஒருநாள், ஒரு கிராமத்தில் உற்சவம் நடந்தது. மாதவதாஸர் அங்கு போஜனம் செய்யச் சென்றார். திரும்பியதும், ஜகந்நாததாஸ், அவரைப் பார்த்து ‘இங்கிருந்து கிராமம் எவ்வளவு தூரம்’ என்று கேட்டார்.

‘இரண்டு மைல்’

அங்கு எத்தனை பூரி சாப்பிட்டாய்?

'எட்டு'

'இப்போது உடம்பு எப்படி உள்ளது?'

'மிகவும் சோர்வாக உள்ளது. சோம்பலாகவும் உள்ளது'.

'பிறகு ஏன் இப்படி வனத்தில் கஷ்டப்படுகிறாய்? பூரிகளை உண்பதற்காக எவ்வளவு தூரம் நடக்க வேண்டியிருக்கிறது. பார்! இதற்கு பதில் நீ பிருந்தாவனத்திலேயே இருக்கலாம். அங்கு, தினமும் உற்சவம் நடந்துகொண்டே இருக்கும். பூரி, கச்சோடி போன்றவைகளை உண்பதற்காக இவ்வளவு சிரமப்பட வேண்டியிருக்காது'.

ஜகந்நாததாஸரின் இந்த வார்த்தைகளைக் கேட்ட மாதவதாஸ் பாபா அன்றிலிருந்து உற்சவங்களில் பங்கேற்பதையே தவிர்த்து விட்டார். இதன்பின்பு, பாபா பர்ஸானாவில் சில நாட்கள் தங்கி பின் காம்யவனம் சென்றார். அங்கு பலகாலம் பஜனை செய்து வந்தார். ஒருநாள், அவருக்கு மிகவும் வேதனை ஏற்பட்டது. 'இவ்வளவு நாட்களாக நான் பஜனை செய்கிறேன். இருந்தும் ராதாராணியின் கிருபைக்கு நான் பாத்திரமாகவில்லை. இதில், அவருடைய தோஷம் என்ன உள்ளது? அவரோ மிகவும் எளிமையும், தாராளமனமும் கொண்டவர். என்னுடைய ஹ்ருதயம்தான் கபடமாக உள்ளது'.

இவ்வாறு நினைத்தவாரே, மதுகரிக்குச் செல்லாமல் அவர் படுத்து விட்டார். குற்ற உணர்வினால் அவருடைய இதயம் துடித்தது. இவர் இப்படி அழுதுகொண்டிருந்தபோது, வாசலில் 'பாபா! ஓ பாபா!' என்று ஒரு சிறுமியின் குரல் கேட்டது.

(தொடரும்)

ஸ்ரீ ஹரி :

**<u>ஸ்ரீ ப்ரேமிகவரதன் மருத்துவ முகாம், மஹாரண்யம், மதுரபுரி</u>**

ஸ்ரீ சாந்தீபனி குருகுலம் ட்ரஸ்ட், சென்னை சார்பில் ஸ்ரீ ப்ரேமிக வரதன் இலவச மருத்துவ முகாம், மஹாரண்யம், மதுரபுரியில் மார்ச் மாத எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் நடைபெற்றன.

**- Trustees**

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 133

*நின்னெரி எரித்தெனை நீறாக்கிடு முன்*
*நின்னருள் புரி அருணாசலா*

கர்ம யோகமோ, தியான யோகமோ, ஞான யோகமோ, பக்தி யோகமோ, ராஜ யோகமோ எந்த ஒரு மார்க்கத்தை ஒருவர் பின்பற்றுவார் எனினும், ஏற்படப்போகும் அனுபவம் ஒன்றே. அஃதாவது, ராஜயோகத்தை (இங்கு ராஜயோகம் என்பது யம, நியம, ஆசன, ப்ராணாயாம, ப்ரத்யாஹார, தாரணை, த்யானம், சமாதி எனப்படும் அஷ்டாங்க யோகம்) எவரொருவர் பயில்கிறாரோ அவருக்குச் குண்டலியானது மூலாதாரத்தில் இருந்து கிளம்பி, மேல்நோக்கிச் செல்கிறது. இப்படிப்பட்ட ஓர் அனுபவம் எந்த ஒரு மார்க்கத்தைப் பின்பற்றுவோருக்கும் ஏற்படும். ஒருவர் பக்தி யோகம் செய்து வந்தாலும், அவருக்கும் இந்தக் குண்டலினியானது மேலே கிளம்பத்தான் செய்யும். ஒருவர் ஞானசாதனை செய்துவந்தாலும் இப்படிக் குண்டலினி மேலே கிளம்பத்தான் செய்கிறது. இது தியானம் செய்பவருக்கும், கர்ம மார்க்கத்தைச் சேர்ந்தவருக்கும் கூட பொருந்தும். குண்டலினி கிளம்பாவிடில் ஆத்ம சாக்ஷாத்காரம் கிட்டாது. எம்மார்க்கத்தைப் பின்பற்றுவோருக்கும் ஆத்ம சாக்ஷாத்காரம் ஏற்படும் என்பதால், குண்டலினியும் அனைவருக்கும் பக்குவம் ஏற்படும்பொழுது மூலாதாரத்திலிருந்து கிளம்புகிறது.

மேற்குறிப்பிட்ட மார்க்கங்களின்றி, நேரடியாக ஆத்மவிசாரம் மட்டுமே பயிலும் ஒருவருக்கு மட்டுமே இத்தகைய அனுபவம் ஏற்படுவதில்லை. அவருக்கு ஹ்ருதயத்திலிருந்து ஒரு நாடி கிளம்புகிறது.

குண்டலினி சக்தி மேல்நோக்கிக் கிளம்புவது அனைத்து மார்க்கத்தைச் சேர்ந்த சாதகர்களுக்கும் பொது எனினும், இதில் ராஜயோக மார்க்கத்தைப் பற்றி அதிகம் குறிப்பிடத்தான் வேண்டும். காரணம், குண்டலினி கிளம்புவதுதான் ஒரு ராஜயோகிக்கு லட்சியம்.

பக்தனுக்கு இத்தகையதோர் அனுபவம் ஏற்பட்டாலும் அவன் அதை லட்சியம் செய்யாது, பகவானையே லட்சியமாகக் கொள்கிறான். வேதாந்திக்கு ஆத்ம சொரூபமே - ஸ்தானமே லட்சியம். தியானம் செய்பவன் தியானத்தில் கவனத்தைச் செலுத்த வேண்டுமே தவிர, குண்டலினி மேலே கிளம்பியதா இல்லையா எனப் பார்க்கக்கூடாது. கர்ம மார்க்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு அவர்களுடைய உபாசனையே, கிரியைகளே இலக்கு. இந்த மார்க்கங்களைச் சேர்ந்தோர் குண்டலினி சக்தி மேலே கிளம்புவதில் கவனம் செலுத்துவதில்லை. அது கிளம்பினாலும், தங்கள் தங்கள் மார்க்கத்திலேயே அவர்கள் குறியாக இருக்கின்றனர். ராஜயோகியோ, இதில் வேறுபட்டு குண்டலினி சக்தியிலேயே தனது முழுக்கவனத்தையும் செலுத்துகிறான்.

இப்படிப்பட்ட அனுபவம் சாதகர்களுக்கு ஏற்படுகிறது என்பதைக் கோவில் அமைப்பிலிருந்துகூட எடுத்துச் சொல்லலாம். காமாட்சி அம்மன் ஆஸனம் போட்டு அமைந்திருப்பதை “பத்மாஸனம்” என்பர். ஆயின் அது உண்மையில்லை. காமாட்சி அமர்ந்து இருப்பது சித்தாஸனம். ஹடயோக தீபிகை என்று ஒரு நூல் உள்ளது. இதில் பலவித ஆஸனங்கள் உள்ளது. இதற்கும் ஞானத்திற்கும் சம்பந்தம் கிடையாது. இந்த ஆஸனங்கள் சரீரத்தை மேலும் வலிமை உள்ளது ஆக்கும்.

அதுபோல், ராஜயோகக் கிரந்தங்களில் கோமுகாஸனம், வஜ்ராஸனம், குக்குடாஸனம் என்று பலவித ஆஸனங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. இவை ஞானம் தராது. எனினும், இவை ஞானத்தை அடைய அனுகூலமாய் உள்ளன.

இந்த நூல்களில் பத்மாஸனம் பற்றி உள்ளது. அதில் இருகால்களும் மற்றொரு கால் தொடை மேல் வந்துவிடுகிறது. காமாட்சி அம்மனுக்கோ ஒன்று மட்டுமே அப்படி இருக்கும். அது சித்தாஸனம். இது ஞானத்திற்கு அனுகூலம். மேலும் இந்தக் காமாட்சி அம்மன் கோவில் சுற்றுப் பிரகாரம் மூன்றரை சுற்று இருக்கும். இறுதியில் அரூபக் காமாட்சி வரை வரும் பிரகாரம் அரைச் சுற்றுதான். இது எதைக் குறிக்கிறது என்றால், ப்ராண சக்தியான குண்டலினி மூலாதாரத்தில் 3½ சுற்று அளவு உள்ள ஒரு பாம்பு போல் சுருண்டு கிடக்கிறது. இந்த ராஜ யோக ஸாதனைகள் அதை விழிப்புறச் செய்கின்றன.

ஒரு பக்தன் எந்தவொரு சித்தாந்தத்தையோ, நூலறிவோ பெறாது மூட பக்தியுடனும், திட பக்தியுடனும் ஒரே ஒரு நாமத்தை இடைவிடாது சிரத்தையுடன் சொல்லி வருவானே ஆகில், அவனுக்கும் இந்த அனுபவம் ஏற்படும். இறைவன் அப்படிப்பட்ட ஒரு பக்தனுக்கு அருள் புரிவதற்கு முடிவு செய்யும் பட்சத்தில் குண்டலினியானது ஒரு கணத்தில் மூலாதாரத்தில் இருந்து கிளம்பி புருவமத்திக்கு வந்து விடுகிறது. இங்கு சுஷும்னை எனப்படும் அந்தக் குண்டலினியின் அருகில் இடகலை, பிங்கலை எனும் நாடிகள் வருகின்றன. இறைவனின் அருளால் இந்தப் பிராணசக்தியின் விழிப்பு பக்தனுக்கு கணத்தில் ஏற்படுகிறது. நாமதேவர் போன்ற பக்தர்களின் சரித்திரமே இதற்குப் பிரமாணம்.

நன்கு தியானம் செய்யும் ஒருவனுக்கும் இது ஏற்படுகிறது. தியானம் செய்பவன் ஒரு மூர்த்தியையோ தனது குருவின் உருவையோ சித்திரம் வரைபவன் சித்திரம் வரைவது போலத் தனது ஹிருதயத்தில் வரைந்து அதிலேயே தன் முழுக் கவனத்தையும் செலுத்துகிறான். இதில் அவன் கவனப் பிசகு இன்றி இருந்தால், மூலாதாரத்தில் இருந்து ப்ராணசக்தி கிளம்பும். இருப்பினும், தியானம் செய்பவன் ப்ராண சக்தி கிளம்பியதா, இல்லையா என்று கவனியாமல் தியானத்திலேயே ஈடுபட்டு இருக்கவேண்டும். அப்படி இருந்தால், குண்டலினி ஸஹஸ்ராரம் நோக்கிச் சென்று அனுபவங்களைத் தரும்.

மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாஹதம், விசுத்தி, ஆக்ஞா, ஸஹஸ்ராரம் போன்ற இடங்களில் ஏற்படும் சக்கர தர்சன அனுபவங்கள் ராஜயோகிக்கும் உண்டு. பக்தனுக்கும் உண்டு. ஞானயோகிக்கும் உண்டு. இருப்பினும், பக்தனுக்கு இறைவனருளால் இது கணத்தில் நிகழ்கிறது.

ஆத்மவிசாரம் மட்டுமே கைக்கொள்பவருக்கு மூர்த்தநாடி எனப்படும் நாடியானது ஹிருதயத்திலிருந்து கிளம்பி ஸஹஸ்ராரம் சென்றுவிடுகிறது.

(தொடரும்)

அன்று மாலை 6.30 மணிக்கு வேலூர் மாவட்டம் நாட்றம் பள்ளி ஸ்ரீ ராமக்ருஷ்ணமடம் மற்றும் ஆம்பூர் ஸ்ரீ ராமகிருஷ்ணர் பணி மன்றம் சார்பில் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் 172-வது அவதார தினத்தை முன்னிட்டு ஆம்பூர் ஸ்ரீ ஸ்ரீ நிவாஸ பெருமாள் திருக்கோவிலில் 'குருதேவர் வாழ்வும் வாக்கும்' பற்றி ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் அருளுரை வழங்கினார்கள். இதில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

### மார்ச் 10-ஆம் தேதி

காலை 10 மணியளவில் திருவானைக்கா கோவில் சுமங்கலி மஹாலில் சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ராவின் கிளையை ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

அன்று காலை 11.00 மணியளவில் துறையூர் ராகவேந்திரா மெட்ரிக்குலேஷன் பள்ளிக்கு விஜயம் செய்து, ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் மாணவர்களுக்கு ஆசியுரை வழங்கினார்கள்.

### மார்ச் 10-ம் தேதி

### மஹாமந்திர நாமகீர்த்தன கூட்டுப் பிரார்த்தனை - திருச்சி

திருச்சி கான்டோன்மெண்ட் கர்ப்பரக்ஷகி மஹாலில் (மங்கல் மஹால்) உலக அமைதி வேண்டியும், எல்லோருக்கும் எல்லா விதமான நன்மைகள் ஏற்படவும், ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் முன்னிலையில் மஹாமந்திர நாமகீர்த்தன கூட்டுப் பிரார்த்தனை மாலை 6.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை நடைபெற்றது.

முதலில், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் நாம மஹிமையைப் பற்றி அருளுரை வழங்கினார்கள். பிறகு, ஸ்ரீ ஸ்வாமிஜியுடன் அங்கு கூடியிருந்த பல ஆயிரம் மக்களும் சேர்ந்து மஹாமந்திரத்தை இசைத்து பரவசம் அடைந்தார்கள். இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ராவை சேர்ந்த திரு. சத்யா, திரு. காசிநாதன், டாக்டர் ஜெயம் கண்ணன், ஸ்ரீராம் சிட்ஸ் நிறுவனத்தினர் மற்றும் ஸ்ரீரங்கம் திரு. ராமசந்திரன் உள்ளிட்ட ஒருங்கிணைப் பாளர்கள் செய்திருந்தனர்.

### பெரியகுளம்

மார்ச் 3-ஆம் தேதி அன்று காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை ''ஹரே ராம'' மஹாமந்திர கூட்டுப்பிரார்த்தனை ஸ்ரீ ஸ்வாமிஜி அருளாசியுடன் தாமரைக்குளம் ஸ்ரீ லெட்சுமி நாராயணஸ்வாமி திருக்கோயிலில் நடைபெற்றது.

ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி நாமஸங்கீர்த்தனப் பேரவையைச் சேர்ந்த திரு. ஹரே ராம **R.** கிருஷ்ணகுமார், ஸ்ரீ சைதன்ய மஹாப்ரபு ஜெயந்தி விழாவை முன்னிட்டு இந்த ஹரே ராம மஹாமந்திர கூட்டு பிரார்த்தனையை ஏற்பாடு செய்திருந்தார்.

திரு. ''ஹரே ராம'' **R.** க்ருஷ்ணகுமார் அவர்களின் ஏற்பாட்டில் மஹாமந்திர கீர்த்தனம் நடைபெறும் இடங்கள்.

### பிரதி ஞாயிறு தோறும்

1. பெரியகுளம் ஸ்ரீ கிருஷ்ணன் கோயில் சாவடி, தென்கரையில் மாலை 6 மணி முதல் 7 மணி வரை.
2. கைலாசபட்டி மந்தை அம்மன் கோவிலில் இரவு 7.30 மணி முதல் 8.30 மணி வரை நடைபெறுகிறது.

### பிரதி திங்கள் தோறும்

1. பெரியகுளம் முத்தாலம்மன் கோவில், சௌராஸ்டிரா சத்திரம் அருகில், மாலை 6 மணி முதல் 7 மணி வரை.
2. வடுகபட்டி சின்னத்தம்பி சீலைக்காரி அம்மன் பெருமாள் சுவாமி கோவிலில் இரவு 7.30 மணி முதல் 8.30 வரை நடைபெறுகிறது.

### பிரதி செவ்வாய் தோறும்

1. பெரியகுளம் ஸ்ரீ காளியம்மன் கோவில், கம்பம் ரோடு, தென்கரையில் மாலை 5.45 மணி முதல் 6.45 வரை.
2. வடுகபட்டி ஸ்ரீ நிவாசபெருமாள் கோவில், சௌடாம்பிகை கோவில் தெருவில் இரவு 7 மணி முதல் 8 மணி வரை நடைபெறுகிறது.

### பிரதி புதன் தோறும்

1. பெரியகுளம் பரிமளா தேவி இல்லம், **VRB** நாயுடு தெரு, வடகரையில் மாலை 6 மணி முதல் 7 மணி வரை நடைபெறுகிறது.

### பிரதி வியாழன் தோறும்

1. பெரியகுளம் அன்னை இல்லம், வைத்தியநாதபுரம், வடகரையில் மாலை 6 மணி முதல் 7 மணி வரை.
2. தாமரைக்குளம் அழகுமலையான் கோவிலில் இரவு 7.30 மணி முதல் 8.30 மணி வரை நடைபெறுகிறது.

### பிரதி வெள்ளி தோறும்

1. பெரியகுளம் ஸ்ரீ பாலமுருகன் கோவில் குமார் தெரு, வடகரையில் மாலை 5.30 மணி முதல் 6.30 மணி வரை.
2. வடபுதுப்பட்டி ஸ்ரீ சௌந்தர்ராஜப் பெருமாள் கோவிலில் இரவு 7.30 மணி முதல் 8.30 மணி வரை நடைபெறுகிறது.

### பிரதி சனி தோறும்

1. தாமரைக்குளம் மலைமேல் வெங்கிடாஜலபதி கோவிலில் காலை 10 மணி முதல் 11 வரை.
2. பெரியகுளம் ஸ்ரீ வரதராஜப்பெருமாள் கோவில் மாலை 6 மணி முதல் 7 மணி வரை.
3. மேல்மங்கலம் வேலாளர் சாவடியில் இரவு 7.30 மணி முதல் 8.30 மணி வரை நடைபெறுகிறது.

### பிப்ரவரி, மார்ச் மாதங்களில்

தூத்துக்குடி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி கேந்த்ரா சார்பில் நாம கீர்த்தன சத்சங்கம், நகர்வல நாமகீர்த்தனம் நடைபெற்றன.

நகர்வல நாமகீர்த்தனம் தூத்துக்குடி, சிவன் கோவிலில் புறப்பட்டு பெருமாள் கோவில் வரை, திருமலையாபுரம், ஏரல், தங்கம்மாள்புரம் முதலிய இடங்களிலும், மஹாமந்திர நாமகீர்த்தன கூட்டுப் பிரார்த்தனை சச்சிதானந்த சபை, பெருமாள் கோவில், ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி இல்லம், பார்வதி அம்மன் கோயில் முதலிய இடங்களிலும் நடைபெற்றது. இதற்கான ஏற்பாடுகளை தூத்துக்குடி திரு. K. கதிரேசன் அவர்கள் தலைமையில் தூத்துக்குடி பக்தர்கள் செய்தனர்.

**மார்ச் 24-ஆம் தேதி**

அம்பாசமுத்திரம் ஸ்ரீ க்ருஷ்ணன் கோயிலில் தொடர்ந்து 24 மணி நேரம் ஹரே ராம மஹாமந்திர அகண்டநாம கூட்டுப் பிரார்த்தனை அம்பை-சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ராவின் நான்காம் ஆண்டை முன்னிட்டு, உலக அமைதிக்காக நடைபெற்றது. இதில் அம்பாசமுத்திரம், விக்கிரமசிங்கபுரம், சேரன்மகாதேவி, கல்லிடைக் குறிச்சி சேர்ந்த ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

ஸ்ரீ ஹரி:

**மஹாமந்திர நாமகீர்த்தன**
**கூட்டுப் பிரார்த்தனை - சேலம்பிர-**

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின் அருளாசியுடன், உலக அமைதி வேண்டியும், எல்லோருக்கும் எல்லாவித நன்மைகள் ஏற்படவும், ''ஹரே ராம....'' மஹாமந்திரத்தின் வைபவத்தை நிலைநிறுத்தவும், ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின் முன்னிலையில்,

**''ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே!**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே!!''**

மஹாமந்த்ர நாமகீர்த்தனக் கூட்டுப் பிரார்த்தனை நடைபெற உள்ளது.

இடம் : தெய்வீகம் கல்யாண மண்டபம்,
சாரதா கல்லூரி சாலை,
அழகாபுரம் போலீஸ் நிலையம் எதிரில்,
சேலம் - 636 016.

**நாள் : 30.04.2007, 01.05.2007**

நேரம் : மாலை 7.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை

மேலும் தொடர்புக்கு :

**சைதன்ய மஹாபிரபு நாமபிக்ஷா கேந்திரா - சேலம் மையம்**

''ஸ்ரீ வாரி தர்ஷன்'', புது எண். 81/1, காந்தி ரோடு, சேலம் - 636 007.
Ph. : 0427-2310560, 6451605 Cell : 98427 10560, 98427 10569

*Copyright of articles published in '**MADHURAMURALI**' is reserved. No part of this Magazine may be reproduced, reprinted or utilised in any form or by any means, electronic or mechanical, including photocopying, recording or by any information storage and retrieval system, without permission in writting from the publisher of Madhura Murali.*

## ஸ்ரீ ஸ்வாமிஜியின் நிகழ்ச்சி நிரல்

| தேதி | நிகழ்ச்சி/இடம் | தொடர்புக்கு |
|---|---|---|
| 07.04.2007 | அருளுரை<br>இடம் : ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமி பிருந்தாவனம், கூத்தப்பாக்கம், கடலூர் | திரு. சுந்தரேசன்<br>232324 |
| 09.04.2007 | இடம் : பரமக்குடி | திரு. ஆன்ட்ரூஸ்<br>98426 82478 |
| 10.04.2007 | நாமகீர்த்தன கூட்டுப்பிரார்த்தனை<br>இடம் : கெங்குவார்பட்டி | திரு. வினோத்<br>04544-6236471 |
| 11.04.2007<br>12.04.2007 | நாமகீர்த்தன கூட்டுப்பிரார்த்தனை<br>இடம் : பெரியகுளம் | ஹரேராம R. கிருஷ்ணகுமார்<br>92454 39344 |
| 13.04.2007<br>14.04.2007 | நாமகீர்த்தன கூட்டுப்பிரார்த்தனை<br>இடம் : லக்ஷ்மி சுந்தரம்ஹால், மதுரை | திரு. ராமானுஜதாஸன்<br>94420 90073 |
| 15.04.2007 -<br>21.04.2007 | உதயாஸ்தன ஸப்தாஹம்<br>இடம் : மதுரபுரி ஆஸ்ரமம் | |
| 26.04.2007 | மிட்டாளம் கும்பாபிஷேகம் | |
| 30.04.2007<br>01.05.2007 | மஹாமந்திர நாமகீர்த்தன கூட்டு பிரார்த்தனை<br>இடம் : சேலம் | திரு. ஸ்ரீ S.வெங்கட்ராம்<br>2266467<br>2264400 |
| 03.05.2007 -<br>04.05.2007 | ராதா கல்யாணம்<br>இடம் : K.K.V. பெருமாள் கோனார் ராமானுஜ கூடம், ஸ்ரீ ரங்கம் | திரு. ராமசந்திரன்<br>0431-2436299 |
| 05.05.2007 -<br>08.05.2007 | நாமகீர்த்தன கூட்டுப்பிரார்த்தனை<br>இடம் : பிரியதர்சினி ஹால் East Fort, திருவனந்தபுரம் | திரு. ராமசுப்ரமணியன்<br>9388009909 |
| 09.05.2007<br>10.05.2007 | நாமகீர்த்தன கூட்டுப்பிரார்த்தனை<br>இடம் : கோயமுத்தூர் | திரு. கிருஷ்ணன் |

**மங்களானிபவந்து**